ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1941/43 - 2015 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2015.11.20

*1941/43 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### ***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனங்கள் தொடர்பில், அட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன். இக்கட்டளை 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி தொடக்கம் தொடங்குகின்ற 06 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட 2015.09.07 ஆந் திகதிய 1931/7 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் விதிக்கப்பட்ட உருளைக் கிழங்கு (எச். எஸ். தலைப்பு இல. 0701.90), 2015.10.09 ஆந் திகதிய 1935/45 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் விதிக்கப்பட்ட பெரிய வெங்காயம் (எச். எஸ். தலைப்பு இல. 0703.10.20), 2015.10.01 ஆந் திகதிய 1934/32 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் விதிக்கப்பட்ட மீன் வகை (எச். எஸ். தலைப்பு இல. 03.02 மற்றும் 03.03), 2015.06.16 ஆந் திகதிய 1919/33 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2015.09.07 ஆந் திகதிய 1931/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி ஆகியவற்றில் விதிக்கப்பட்ட பருப்பு (எச். எஸ். தலைப்பு இல. 0713.40.11, 0713.40.12, 0713.40.21, 0713.40.22) சம்பந்தமான உத்தரவு 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*ரவி கருணாநாயக்க,*
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2015, நவெம்பர் 20.*

## அட்டவணை

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 1. | 03.02 | | மீன் புதியது அல்லது குளிரூட்டப்பட்டவை தலைப்பு 03.04 இன் கீழ் தரப்பட்ட முள்ளற்ற துண்டுகளையும் மீன் இறைச்சியையும் தவிர்ந் தவை | 10% அல்லது ஒரு கிலோ கிராம் 50 ரூபா இரண்டிலும் எது கூடியதோ அது |
| | 03.03 | | தலைப்பு 03.04 இன் கீழ்வரும் முள்ளற்ற மீன் துண்டுகளும் பிற மீன் இறைச்சியும் நீங்கலாக ஏனைய மீன் - குளிரால் உறையச் செய்யப் பட்டது (எச்.எஸ். தலைப்பு இல. 0303.54 இன் கீழ் வரும் மெகரல் மீன் தவிர்ந்தவை) | 10% அல்லது ஒரு கிலோ கிராம் 50 ரூபா இரண்டிலும் எது கூடியதோ அது |
| 2. | 07.01 | 0701.90 | பிற - உருளைக்கிழங்கு | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 15.00 |
| 3. | 07.03 | 0703.10.20 | பெரிய வெங்காயம் | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 5.00 |
| 4. | 07.13 | 0713.40.11 | முழுமையான மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) | கி. கிராம் ஒன்றுக்கு 25 சதம் |
| | | 0713.40.12 | பிளக்கப்பட்ட மைசூர் பருப்பு (சிவப்பு பருப்புகள்) | கி. கிராம் ஒன்றுக்கு 25 சதம் |
| | | 0713.40.21 | முழுமையான மஞ்சள் பருப்பு | கி. கிராம் ஒன்றுக்கு 25 சதம் |
| | | 0713.40.22 | பிளக்கப்பட்ட மஞ்சள் பருப்பு | கி. கிராம் ஒன்றுக்கு 25 சதம் |
| 5. | 08.04 | 0804.10.10 | பேரீச்சம் பழங்கள்- புதியவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |
| | | 0804.10.20 | பேரீச்சம் பழங்கள்- சாறு இல்லாத காய்ந்த | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 60.00 |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.